முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இனிய எளிய தமிழில் எழுதியுள்ள

# “ததும்பும் தமிழ்ப் பெருமிதம்” எனும் நூல்!

## நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார்!

சென்னை, பிப். 22-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படைத்துள்ள “ததும்பும் தமிழ்ப் பெருமிதம்” எனும் நூலை நேற்று முன்தினம் (20.2.2026) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வெளியிட, முதலமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 மே திங்களில் ஆட்சிப்பொறுப்பேற்ற போது, “இது ஒரு கட்சி அரசு அல்ல; ஓர் இனத்தின் அரசு” என்று குறிப்பிட்டார்கள். அதன்படியே, தமிழ் இனத்தின் பெருமைகள் கூறும் மிகச் சிறந்த அரசாக ஐந்து ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளது இந்த அரசு”

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ் மொழியின் - தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மைகள் எல்லாம் மிளிரும் வகையில் உரிய ஆதாரங்களுடன் தமிழ் மக்களும் மற்றவர்களும் அறிந்து உணர்ந்து மகிழ்ந்து பெருமிதம் கொள்ளும் வகையில் இனிய தமிழில் எளிய நடையில் எழுதியுள்ளார்கள்.

இந்த நூலைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும்

கீழடி, பொருநை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொன்மைச் சிறப்புகள் வாய்ந்த பொருள்களை நேர்த்தியாகக் காட்சிப்படுத்தியுள்ள அருங்காட்சியகங்களைக் காண்பது போன்ற உணர்வுகளை ஏற்படுத்தும். இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவிலும் தாதுப் பொருள்களில் இருந்து இரும்பைப் பிரித்து எடுக்கும் தொழில்நுட்பம் தமிழ் நிலப்பரப்பில் இருந்தே 5000 ஆண்டுகளுக்குமுன் தோன்றியுள்ளது என்பது கீழடி, பொருநை அகழாய்வுகள் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவற்றைத் தொடர்ந்து மேலும் பல்வேறு இடங்களில் நடைபெற்றுவரும் அகழாய்வுகளின் துணை கொண்டு தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம், ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் நாவாய் அருங்காட்சியகம், சென்னை, எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஒரு புதிய வெண்கல அருங்காட்சியகம் எனப் பல அருங்காட்சியகங்கள் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கின்றன.

இத்தகைய சிறப்புகளுடன் முதலமைச்சர் அவர்கள் குமரி முனையில் உள்ள அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் வகையில் 37 கோடி ரூபாய் செலவில் கடல் மீது கண்ணாடி இழைப்பாலம் ஒன்றைக் கட்டித் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடும் பணிகளில் ஒன்றாக ஆண்டுதோறும் ஜனவரித் திங்கள் 11 மற்றும் 12 ஆம் நாள்களில் அயலகத் தமிழர்கள் தினம் கொண்டாடி வெளிநாட்டுத் தமிழர்களிடம் தாய்த் தமிழ்நாட்டு உணர்வை வளர்க்கிறார்கள். தமிழ்ப் பெருமை கூறும் நூல்கள் பல அயல்நாட்டு மொழிகளில் வெளியிடப்படுகின்றன. இவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன.

சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என முதன்முதலில் ஆய்ந்து அறிவித்து உலகின் கவனத்தை ஈர்த்த ஜான் மார்ஷல் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு, அவரது திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், தமிழ் மொழியின் பெருமைகளை உலகுக்குப் பறைசாற்றும் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் “இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி, தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் எழுதப்பட வேண்டும்” என்று பேரவையிலும், வேறு பல்வேறு நிகழ்வுகளிலும் எடுத்துரைத்து, ஒன்றிய அரசையும் வலியுறுத்தி வருகிறார்கள்.

அருமைத் தமிழ் மொழியின் செழுமைகளையும் சிறப்புகளையும் அவ்வப்போது வலியுறுத்தி, பல்வேறு நிகழ்வுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றியுள்ள பேருரைகள் தொகுக்கப்பட்டு, “ததும்பும் தமிழ்ப் பெருமிதம்” எனும் பெயரில் அழகிய வடிவில் பல்வேறு வண்ணங்களில் நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தொல்லியல் பொருட்களைக் காட்சிப்படுத்தியுள்ள அருங்காட்சியகங்கள், புதுப்பிக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம், குமரிமுனையில் பேரறிவுச் சிலையுடன் கண்ணாடி இழைப்பாலம், வெளியிடப்பட்டுள்ள தமிழ் நூல்கள் முதலான பல்வேறு செய்திகளுடன் வண்ணப்படங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில், தமிழுக்கான அரசாணைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், அரசு விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுவதை நெறிப்படுத்தும் அரசாணை போன்ற முக்கியமான அரசாணைகள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் செய்யப்பட்ட சிறப்புகள், வழங்கப்பட்ட விருதுகள் மற்றும் சிறந்த நூல்களுக்கான பரிசுகள் வழங்கியது குறித்தும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இவற்றைக் காண்பவர்கள் உள்ளத்தில் இந்நூலைப் படிக்க வேண்டும்; தமிழ்ப் பண்பாட்டுக் களங்களை நேரில் சென்று காண வேண்டும் என்னும் உணர்வுகளை ஏற்படுத்தும்.

உலகின் தொன்மையான தன்னிகரற்ற - தனித்தன்மையான நம் தாய்த்தமிழ் மொழியின் பெருமைகள் அனைத்தையும் உணர்த்தும் வண்ணம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் படைத்துள்ள “ததும்பும் தமிழ்ப் பெருமிதம்” என்னும் சிறப்பு வாய்ந்த நூல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அ.தி.மு.க., தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியதா?

## சட்டப் பேரவையில் – எடப்பாடி பழனிச்சாமிக்கு – அமைச்சர் எ.வ.வேலு அடுக்கடுக்கான வினா!

**சென்னை, பிப்.22-**

**சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசிய போது குறுக்கிட்ட அமைச்சர் எ.வ. வேலு, “சட்டமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையை குறிப்பிட்டு இருந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றினீர்களா?” என்று வினா தொடுத்ததோடு, அ.தி.மு.க. நிறைவேற்றாத பல அறிவிப்புகளின் பட்டியலை அடுக்க டுக்காக வெளியிட்டார்.**



அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது :-

ஒரு இலட்சம் பேருக்கு போக்குவரத்துத் துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிக்கை எண் 4. 2011 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். செய்தீர்களா?

20,000 தொழிற்சாலைகள் இங்கு உருவாக்கப்படும், அறிக்கை எண் 4.

ஏழைகளுக்கு 3 சென்ட் வீடுகட்ட நிலம் அளிக்கப்படும் என்று இதே மாமன்றத்தில் சொன்னீர்கள். நாங்கள் அப்போது எதிர்க்கட்சியில் இருந்தோம். கொடுத்தீர்களா?

2011 ஆம் ஆண்டில் 151 நகராட்சிகளின் கழிவுகளை எடுத்து 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வோம் என்று இதே மாமன்றத்தில் சொல்லப்பட்டது. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டது. நடந்ததா? இல்லை. ஏன்?

கச்சத் தீவை மீட்டெடுத்து தமிழர்கள் நலனைக் காப்போம், அறிக்கை எண் 19. நடந்ததா?

58 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச bus pass வழங்கப்படும் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். நடந்ததா?

தமிழை இந்திய ஆட்சி மொழியாக்குவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று அறிக்கை எண் 29ல் சொன்னீர்கள். நடைபெற்றதா?

கப்பல் கட்டும் துறையில் 10,000 கோடி ரூபாய் அந்நிய நாட்டு முதலீட்டை ஈர்ப்போம் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

2011 ஆம் ஆண்டில் 6,000 கிராமங்களில் சீரமைக்கப்பட்ட பால் பண்ணை தொடங்கப்படும் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் “அம்மா இரு சக்கர வாகனம்” பழுது பார்க்கிற மையம் அமைப்போம் என்று சொன்னீர்கள். அது நடந்ததா?

அனைத்து வேலைக்குச் செல்கிற பெண்களுக்கும் *Amma scooter* முழுமையாக வழங்கப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

ஆதிதிராவிட பழங்குடியினர் நல விடுதிகளில் நீராவி கொதிகலன் அமைக்கப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

நரிக் குறவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிக்கை எண் 13ல் சொன்னீர்களே, நடந்ததா?

அம்பேத்கர் கொள்கையைப் பரப்புவதற்காக 5 கோடி மதிப்பீட்டில் *Dr. Ambedkar Foundation* நிறுவப்படும் என்று சொன்னீர்களே, அது நடந்ததா?

இது தவிர, *Ration Card* வைத்திருக்கிற மகளிர் அனைவருக்கும் *Cell Phone* தருவதாகச் சொன்னீர்களே? அது நடந்ததா?

மேலும், நானும் பட்டியல் போட முடியும்.

நேரகாலத்தின் அருமை கருதி இத்துடன் முடித்துக் கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் சொல்கிறீர்கள், நாங்களும் சொல்கிறோம். ஒரு அரசாங்கம் நிதிநிலைமைக்கேற்பதான் செய்ய முடியும். எனவே, நீங்களும் இவை அனைத்தையும் சொன்னதைச் செய்யவில்லை என்பதையும் நான் உறுதிசெய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

---

# தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், நாளை (23.2.2026 திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் போஸ்வெங்கட், எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், செயலாளர்கள் மா.உமாபதி, இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என். தில்லைசெல்வம் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன், எம்.எஸ்.ஹரிபாபு, என். எஸ்.மாதேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

**பொருள் :** முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் கழக ஆக்கப் பணிகள் குறித்து

**“அண்ணா அறிவாலயம்”**
**சென்னை18.**
**நாள்: 20.02.2026.**

**வாகை சந்திரசேகர்**
**தலைவர்,**
**கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை.**

---

## கோவை தெற்கு மாவட்டம்

# மதுக்கரை கிழக்கு ஒன்றிய மற்றும் திருமலையாம்பாளையம், கோட்டூர் ஆகிய பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர் விஜயசேகரன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பி.திருமூர்த்தி** (3/185, கருப்பராயன் கோவில்மேடு, மயிலேறிபாளையம், கோவை-641032.) அவர்கள் மதுக்கரை கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம், திருமலையாம்பாளையம் பேரூர்ச் செயலாளர் ராமராஜீ அவர்களுக்குப் பதிலாக, **ஆர்.கிருஷ்ணசாமி**, (சின்னதம்பி கவுண்டர் வீதி, குமிட்டிபதி, கோவை-641032.) அவர்கள் திருமலையாம்பாளையம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும்;

ஆனைமலை கிழக்கு ஒன்றியம், கோட்டூர் பேரூர்ச் செயலாளர் கே.வி.பால்ராஜ் அவர்களுக்குப் பதிலாக **இ.ராமகிருஷ்ணன்**, (1-டி, ஜெயப்பிரகாஷ் வீதி, கோட்டூர், மலையாண்டிபட்டிணம், பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.) அவர்கள், கோட்டூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றிய/பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

கீழ்வேளூர் – கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில்

# உயர் தொழில் நுட்ப ஆய்வகம் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது!

## சட்டப் பேரவையில் உறுப்பினர் வி.பி, நாகை மாலி கேள்விக்கு அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி பதில்!

சென்னை, பிப். 22 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் வி.பி.நாகை மாலி கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அளித்த பதில்களும் வருமாறு:

**வி.பி.நாகை மாலி :** கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கணினி மற்றும் அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**, கடந்த 13 ஆம் தேதியன்று *sun rise* ஆகின்ற நேரத்திலே நாட்டு மக்களுக்கு *sweet surprise* கொடுத்த முதலமைச்சர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய அனுமதியோடு விடை நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் நலன் கருதி பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2025-2026 ஆம் ஆண்டிற்கு கணினி உயர் தொழில்நுட்ப ஆய்வகம் ஒன்றும், வகுப்பறை ஒன்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 50 சதவிகித கட்டடப்பணிகள் முடிவடைந்து, இதரப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அறிவியல் ஆய்வகத்திற்கான கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. வரும் கல்வியாண்டில் அறிவியல் ஆய்வகமும் கட்டித்தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வி.பி. நாகைமாலி:** எனது கீழ்வேளூர் தொகுதி, கிள்ளுக்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 3 வகுப்பறைகள் முடிந்து விட்டன. 2 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. 10 கணினியும் கொடுக்கப்பட்டு, அறிவியல் ஆய்வகமும் செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சி யோடு நான் தெரிவித்துக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், எனது தொகுதி குறிச்சி அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டு, ஏறக்குறைய 4 ஆண்டுகள் ஆகின்றன.

ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** தரமுயர்த்துவது சம்பந்தமான கேள்வியை அண்ணன் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே *first phase*ல், *set of schools*க்கு *clearance* கொடுத்து தரமுயர்த்திருக்கிறோம். கண்டிப்பாக உங்களுக்கே தெரியும், அடுத்த ஜூன் மாதத்தில் திராவிட மாடல் 2.0 ஆட்சிதான் நம்முடைய தமிழநாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமையும். கண்டிப்பாக *second phase*ல் யார் யாருக்கெல்லாம் இந்தக் கோரிக்கைகள் இருக்கிறதோ, அவை முழுமனதாக தரமுயர்த்தப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வி.பி. நாகைமாலி:** தரமுயர்த்தப்படும் என்று உறுதியளித்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## கோவை தெற்கு மாவட்டம்

# வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு, ஆனைமலை மத்திய ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு ஆகிய

2 ஒன்றியங்கள் **ஆனைமலை கிழக்கு, ஆனைமலை வடக்கு, ஆனைமலை மத்திய** ஆகிய மூன்று ஒன்றியங்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த ஒன்றியங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

மேற்குறிப்பிட்டவாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு அந்தந்த ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆனைமலை கிழக்கு ஒன்றியம்** : 1.அங்கலக்குறிச்சி, 2.பில்சின்னாம்பாளையம், 3. கரியாஞ்செட்டிபாளையம், 4.கம்பாலப்பட்டி, 5.தென்அர்த்தநாரிபாளையம், 6.ஜல்லிபட்டி, 7.எஸ்.நல்லூர் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் கோட்டூர் பேரூர்.

**ஆனைமலை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் : டி.யுவராஜ்**, 4/94, ரெட்டியாரூர் & அஞ்சல், ஆனைமலை, கோவை-642 007.

**ஆனைமலை வடக்கு ஒன்றியம்** : 1.திவான்சாபுதூர், 2.வாழைக்கொம்பு நாகூர், 3. தாத்தாராவத்தன்புதூர், 4.சுப்பேகவுண்டன்புதூர், 5.ஆத்துப்பொள்ளாச்சி ஆகிய 5 ஊராட்சிகள்.

**ஆனைமலை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் : எஸ்.யுவராஜ்**, 3/54, மெயின் ரோடு, சுப்பேகவுண்டன்புதூர் & அஞ்சல், ஆனைமலை, கோவை-642 103.

**ஆனைமலை மத்திய ஒன்றியம்** : 1.பெத்தநாயக்கனூர், 2.சோமந்துறை, 3.தென்சித்தூர், 4.ரமணமுதலிபுதூர், 5.தென்சங்கம்பாளையம், 6.சிங்காநல்லூர், 7.வக்கம்பாளையம், 8.நாயக்கன்பாளையம், 9.அம்பாரம்பாளையம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**ஆனைமலை மத்திய ஒன்றிய பொறுப்பாளர் : எஸ்.ஆர்.அண்ணாதுரை**, 3/64, மாகாளியம்மன் கோவில் வீதி, தென்சங்கம்பாளையம், வேடசந்தூர் அஞ்சல், ஆனைமலை, கோவை மாவட்டம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 18.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளர்

# சு.சாமிநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 22-

திருப்பூர் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து திறம்பட கழகப் பணியாற்றி வந்தவரும், தற்போதைய திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளருமான நம்பியாம்பாளையம் சு.சாமிநாதன் அவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை 1 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.


நம்பியாம்பாளையம் சு.சாமிநாதன் மறைவுச் செய்தி அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.ஜே. அகத்தியப்பன்

பிப்ரவரி 22 (2005)



காஞ்சிபுரம் நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

காஞ்சிபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர், அவைத்தலைவர் மற்றும் நகர்மன்ற கட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு அச்சக தொழிற்சங்க பொதுச்செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மொழிப்போர், ஈழத்தமிழர் பாதுகாப்பு, எரிசாராய கமிஷன் ஆணை நகல் எரிப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.